prepp

Practice, Learn and Achieve Your Goal with Prepp

# UGC NET Exam

Tamil

Simplifying
Government Exams

SSC CHSL | IAS EXAM | RRB NTPC | NTSE | CDS
SSC CGL | CBSE UGC NET | IBPS PO | NDA
SBI PO | IBPS CLERK | AFCAT | SSC JE | CTET
CSIR UGC NET | CAPF | IBPS RRB

www.prepp.in

# PAPER-II
# TAMIL

**Signature and Name of Invigilator**

1. (Signature) ____________________________
   (Name) ____________________________
2. (Signature) ____________________________
   (Name) ____________________________

OMR Sheet No. : ............................................
(To be filled by the Candidate)

Roll No. | | | | | | | | |
(In figures as per admission card)

Roll No.____________________________________
(In words)

**D 2 6 1 0**

Time : **1 $^1/_4$** hours] [Maximum Marks : **100**

Number of Pages in this Booklet : **12** | Number of Questions in this Booklet : **50**

## Instructions for the Candidates

1. Write your roll number in the space provided on the top of this page.
2. This paper consists of fifty multiple-choice type of questions.
3. At the commencement of examination, the question booklet will be given to you. In the first 5 minutes, you are requested to open the booklet and compulsorily examine it as below :
   (i) To have access to the Question Booklet, tear off the paper seal on the edge of this cover page. Do not accept a booklet without sticker-seal and do not accept an open booklet.
   (ii) **Tally the number of pages and number of questions in the booklet with the information printed on the cover page. Faulty booklets due to pages/questions missing or duplicate or not in serial order or any other discrepancy should be got replaced immediately by a correct booklet from the invigilator within the period of 5 minutes. Afterwards, neither the Question Booklet will be replaced nor any extra time will be given.**
   (iii) After this verification is over, the OMR Sheet Number should be entered on this Test Booklet.
4. Each item has four alternative responses marked (A), (B), (C) and (D). You have to darken the oval as indicated below on the correct response against each item.
   **Example :** (A) (B) ● (D)
   where (C) is the correct response.
5. Your responses to the items are to be indicated in the **Answer Sheet given inside the Paper I Booklet only.** If you mark at any place other than in the ovals in the Answer Sheet, it will not be evaluated.
6. Read instructions given inside carefully.
7. Rough Work is to be done in the end of this booklet.
8. If you write your name or put any mark on any part of the test booklet, except for the space allotted for the relevant entries, which may disclose your identity, you will render yourself liable to disqualification.
9. You have to return the test question booklet and OMR Answer sheet to the invigilators at the end of the examination compulsorily and must not carry it with you outside the Examination Hall.
10. **Use only Blue/Black Ball point pen.**
11. **Use of any calculator or log table etc., is prohibited.**
12. **There is no negative marks for incorrect answers.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. पहले पृष्ठ के ऊपर नियत स्थान पर अपना रोल नम्बर लिखिए ।
2. इस प्रश्न-पत्र में पचास बहुविकल्पीय प्रश्न हैं ।
3. परीक्षा प्रारम्भ होने पर, प्रश्न-पुस्तिका आपको दे दी जायेगी । पहले पाँच मिनट आपको प्रश्न-पुस्तिका खोलने तथा उसकी निम्नलिखित जाँच के लिए दिये जायेंगे, जिसकी जाँच आपको अवश्य करनी है :
   (i) प्रश्न-पुस्तिका खोलने के लिए उसके कवर पेज पर लगी कागज की सील को फाड़ लें । खुली हुई या बिना स्टीकर-सील की पुस्तिका स्वीकार न करें ।
   (ii) कवर पृष्ठ पर छपे निर्देशानुसार प्रश्न-पुस्तिका के पृष्ठ तथा प्रश्नों की संख्या को अच्छी तरह चैक कर लें कि ये पूरे हैं । दोषपूर्ण पुस्तिका जिनमें पृष्ठ/प्रश्न कम हों या दुबारा आ गये हों या सीरियल में न हों अर्थात किसी भी प्रकार की त्रुटिपूर्ण पुस्तिका स्वीकार न करें तथा उसी समय उसे लौटाकर उसके स्थान पर दूसरी सही प्रश्न-पुस्तिका ले लें । इसके लिए आपको पाँच मिनट दिये जायेंगे । उसके बाद न तो आपकी प्रश्न-पुस्तिका वापस ली जायेगी और न ही आपको अतिरिक्त समय दिया जायेगा ।
   (iii) इस जाँच के बाद OMR पत्रक की क्रम संख्या इस प्रश्न-पुस्तिका पर अंकित कर दें ।
4. प्रत्येक प्रश्न के लिए चार उत्तर विकल्प (A), (B), (C) तथा (D) दिये गये हैं । आपको सही उत्तर के दीर्घवृत्त को पेन से भरकर काला करना है जैसा कि नीचे दिखाया गया है ।
   उदाहरण : (A) (B) ● (D)
   जबकि (C) सही उत्तर है ।
5. प्रश्नों के उत्तर केवल प्रश्न पत्र I के अन्दर दिये गये उत्तर-पत्रक पर ही अंकित करने हैं । यदि आप उत्तर पत्रक पर दिये गये दीर्घवृत्त के अलावा किसी अन्य स्थान पर उत्तर चिह्नांकित करते हैं, तो उसका मूल्यांकन नहीं होगा ।
6. अन्दर दिये गये निर्देशों को ध्यानपूर्वक पढ़ें ।
7. कच्चा काम (Rough Work) इस पुस्तिका के अन्तिम पृष्ठ पर करें ।
8. यदि आप उत्तर-पुस्तिका पर अपना नाम या ऐसा कोई भी निशान जिससे आपकी पहचान हो सके, किसी भी भाग पर दर्शाते या अंकित करते हैं तो परीक्षा के लिये अयोग्य घोषित कर दिये जायेंगे ।
9. आपको परीक्षा समाप्त होने पर प्रश्न-पुस्तिका एवं OMR उत्तर-पत्रक निरीक्षक महोदय को लौटाना आवश्यक है और परीक्षा समाप्ति के बाद उसे अपने साथ परीक्षा भवन से बाहर न लेकर जायें ।
10. केवल नीले/काले बाल प्वाईंट पेन का ही इस्तेमाल करें ।
11. किसी भी प्रकार का संगणक (कैलकुलेटर) या लाग टेबल आदि का प्रयोग वर्जित है ।
12. गलत उत्तरों के लिए कोई अंक काटे नहीं जाएँगे ।



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

**TAMIL**
தமிழ்
**Paper-II**
தாள்-II

**Note** : This paper contains **fifty (50)** objective type questions, each question carrying **two (2)** marks. Attempt **all** the questions.

**குறிப்பு** : இந்த வினாத்தாள் ஐம்பது (50) விடைதெரி வினாக்கள் கொண்டது. ஒவ்வொரு வினாவுக்கும் உரிய மதிப்பெண்கள் இரண்டு (2). அனைத்து வினாக்களுக்கும் விடை தருக.

1. ‘உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்’ என்பது
(A) மணிமேகலை (B) சீவகசிந்தாமணி
(C) சிலப்பதிகாரம் (D) குண்டலகேசி

2. பத்துப்பாட்டு, சீவகசிந்தாமணி ஆகியனவற்றுக்கு உரை எழுதியவர்
(A) இளம்பூரணர் (B) அடியார்க்கு நல்லார்
(C) நச்சினார்க்கினியர் (D) சேனாவரையர்

3. ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவித்தற்குப் பாடிய பாட்டு
(A) முல்லைப்பாட்டு (B) குறிஞ்சிப்பாட்டு
(C) பெருங்கதை (D) நற்றிணை

4. “முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்” – இடம் பெறும் நூல்
(A) நற்றிணை (B) திருக்குறள்
(C) குறுந்தொகை (D) ஐங்குறு நூறு

5. “சான்றோர் பலர்யான் வாழும் ஊரே” என்று பாடியவர்
(A) கோப்பெருஞ்சோழன் (B) ஔவையார்
(C) பிசிராந்தையார் (D) நச் செள்ளையார்

6. தமிழ்ச் சங்கம் இருந்ததை உறுதிப்படுத்தும் செப்பேடு
(A) சின்னமனூர் செப்பேடு (B) வேள்விக்குடி செப்பேடு
(C) மதுராபுரிச் செப்பேடு (D) அரிக்கமேடு செப்பேடு



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click Know More

7. "சங்கத் தமிழ் மூன்றும் தா" என்று பாடியவர்
   (A) திருநாவுக்கரசர்  (B) நக்கீரர்
   (C) சுந்தரர்  (D) ஔவையார்

8. "தென் தமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரை" என்னும் அடி இடம் பெறும் நூல்
   (A) மதுரைக் காஞ்சி  (B) மணிமேகலை
   (C) சிலப்பதிகாரம்  (D) சீவக சிந்தாமணி

9. 'திருக்கயிலாய ஞானஉலா' என்னும் நூல் இயற்றியவர்
   (A) குமர குருபரர்
   (B) ஒட்டக் கூத்தர்
   (C) சேரமான் பெருமாள் நாயனார்
   (D) சேக்கிழார்

10. ஒப்பியல் ஆய்வு முன்னோடி
   (A) உ.வே.சா.  (B) வ.சுப.மாணிக்கம்
   (C) தெ.பொ.மீ.  (D) வ.வே.சு.ஐயர்

11. 'நவசக்தி' என்ற இதழின் ஆசிரியர்
   (A) ம.பொ.சி.  (B) மு.வ.
   (C) அ.கி.ப.  (D) திரு.வி.க.

12. "மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல
   மாதவம் செய்திடல் வேண்டும் அம்மா" என்று பாடியவர்
   (A) முடியரசன்  (B) பாரதியார்
   (C) கவிமணி  (D) பாரதிதாசன்

13. 'பாரத சக்தி மகாகாவியம்' என்னும் நூலை இயற்றியவர்
   (A) கம்பதாசன்  (B) தமிழ் ஒளி
   (C) வாணிதாசன்  (D) சுத்தானந்த பாரதியார்

14. 'சதுரகராதி' என்ற நூலின் ஆசிரியர்
   (A) எச்.ஏ.கிருஷ்ண பிள்ளை  (B) தனிநாயக அடிகள்
   (C) வீரமா முனிவர்  (D) சிவஞான முனிவர்

15. "இருந்தமிழே உன்னால் இருந்தேன் - இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்னும் அடிகள் இடம் பெறும் நூல்
   (A) புரட்சிக் கவி  (B) தமிழ்விடு தூது
   (C) தமிழ்மாலை  (D) தமிழாலயம்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

16. “கங்கையும் காவிரியும்” என்ற நூலின் ஆசிரியர்

(A) கா.செல்லப்பன் (B) தமிழண்ணல்

(C) கைலாசபதி (D) சிதம்பர ரகுநாதன்

17. ‘நடைச் சித்திரம்’ என்னும் உரைநடை நூலின் ஆசிரியர்

(A) பி.எஸ்.இராமையா (B) ந.பிச்ச மூர்த்தி

(C) கு.ப.ரா. (D) வ.ரா.

18. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணத்தை எழுதியவர்

(A) சீகன் பால்கு (B) ஜி.யூ. போப்

(C) கால்டு வெல் (D) எல்லீஸ்

19. ‘ சாகுந்தல நாடக ஆராய்ச்சி ’ என்னும் நூலை எழுதியவர்

(A) சங்கரதாஸ் சுவாமிகள் (B) பம்மல் சம்பந்த முதலியார்

(C) பரிதிமாற் கலைஞர் (D) மறைமலை அடிகள்

20. ‘ கறுப்புமலர்’ என்னும் கவிதை நூலைப் படைத்தவர்

(A) மீரா (B) அப்துல் ரகுமான்

(C) சிற்பி (D) நா.காமராசன்

21. உறுதிக்கூற்று: ‘சேந்தன் திவாகரம்’ என்பது முதல் நிகண்டு நூல்.
காரணம்: ஆசிரியராலும் பொருளினாலும் பெயர் பெற்றது.

(A) உ.கூ. + கா. இரண்டும் சரி.

(B) உ.கூ. சரி; கா. சரியன்று.

(C) கா. சரி ; உ.கூ. சரியன்று.

(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.

22. உறுதிக்கூற்று: இராமலிங்க அடிகள் பாடிய ‘திரு அருட்பா’ ஆறு திருமுறைகள் கொண்டு புகழ் பெற்றது.
காரணம்: பன்னிரு திருமுறைகளை அடியொற்றி அவர் பாடியதால்.

(A) உ.கூ. சரி ; கா. சரியன்று.

(B) உ.கூ. + கா. இரண்டும் சரி.

(C) உ.கூ. சரியன்று ; கா. சரி.

(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

23. உறுதிக்கூற்று: "விருத்தம் என்னும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்" எனப் புலவோர் போற்றுவர்.
காரணம்: விருத்தப் பாவில் இலக்கிய நலன் மேலோங்க, உணர்ச்சி மீதூர அவர் காப்பியம் இயற்றி இருப்பதால்.
(A) உ.கூ. சரி ; கா. சரியன்று.
(B) கா. சரி ; உ.கூ. சரியன்று.
(C) உ.கூ. + கா. இரண்டும் சரி.
(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.

24. உறுதிக் கூற்று: 'தரும சேனர் ' எனத் திருநாவுக்கரசர் போற்றப் பட்டார்.
காரணம்: பௌத்த மதத் தலைவர்களுள் ஒருவராக இருந்து அவர் தர்மத்தைப் பரப்பியதால்.
(A) உ.கூ. + கா. இரண்டும் சரி.
(B) உ.கூ. சரி ; கா. சரியன்று.
(C) உ.கூ. சரியன்று ; கா. சரி.
(D) உ.கூ. + கா : இரண்டும் சரியல்ல.

25. உறுதிக்கூற்று: உழிஞைத் திணை புறத்திணைகளுள் ஒன்று.
காரணம்: மன்னன் ஒருவன் வேறொரு மன்னனின் மதிலைச் சுற்றி வளைத்து அதனைக் கைப்பற்றிக் கொள்ளும் திறம் பாடுவதால்.
(A) உ.கூ. + கா. இரண்டும் சரி.
(B) உ.கூ. சரி ; கா. சரியன்று.
(C) கா. சரி ; உ.கூ. சரியன்று.
(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.

26. உறுதிக்கூற்று: திரிகடுகம் ஒரு மருந்து நூல்.
காரணம்: சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்று மருந்துப் பொருள்களின் பயன்களை அது எடுத்துரைப்பதால்.
(A) உ.கூ. சரி ; கா. சரியன்று.
(B) உ.கூ. + கா. இரண்டும் சரி.
(C) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.
(D) உ.கூ. சரியன்று ; கா. சரி.

27. உறுதிக்கூற்று: முல்லைப்பாட்டு எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று.
காரணம் : முல்லைக் கொடிக்குத் தேர் ஈந்த பாரியைப் புகழ்ந்து பாடியதால்.
(A) உ. கூ. சரி ; கா. சரியன்று.
(B) உ.கூ. + கா. இரண்டும் சரி.
(C) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.
(D) உ.கூ. சரியன்று ; கா. சரி.



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

28. உறுதிக்கூற்று: "சிந்துக்குத் தந்தை" எனப் பாரதியார் போற்றப் படுகிறார்.
காரணம்: சிந்து நதியை நனி சிறக்க அவர் பாடியதால்.
(A) உ.கூ. + கா. இரண்டும் சரி.
(B) உ.கூ. சரி ; கா. சரியன்று.
(C) உ.கூ. சரியன்று ; கா. சரி.
(D) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.

நிரல் படுத்துக.
29. பெருமிதம் - நிலைக்களன்:
(A) தறுகண், கல்வி,கொடை,இசைமை
(B) கல்வி,தறுகண்,இசைமை,கொடை
(C) கொடை,இசைமை,கல்வி,தறுகண்,
(D) இசைமை,கல்வி,கொடை,தறுகண்

நிரல் படுத்துக:
30. பாவரிசை முறை:
(A) வெண்பா, வஞ்சிப்பா,ஆசிரியப்பா,கலிப்பா
(B) வஞ்சிப்பா,வெண்பா,கலிப்பா,ஆசிரியப்பா
(C) கலிப்பா,ஆசிரியப்பா,வஞ்சிப்பா,வெண்பா
(D) ஆசிரியப்பா,வஞ்சிப்பா,வெண்பா,கலிப்பா

நிரல் படுத்துக:
31. சிறுபொழுதுகள்:
(A) மாலை,யாமம்,வைகறை,எற்படு
(B) வைகறை,எற்படு,மாலை,யாமம்
(C) யாமம்,வைகறை,எற்படு,மாலை
(D) எற்படு,மாலை,யாமம்,வைகறை

நிரல் படுத்துக:
32. வனப்பு :
(A) அழகு,அம்மை,தோல்,தொன்மை
(B) தோல்,தொன்மை,அம்மை,அழகு
(C) அம்மை,அழகு,தொன்மை,தோல்
(D) தொன்மை,தோல்,அழகு,அம்மை

நிரல் படுத்துக:
33. சீர் வாய்பாடு :
(A) கருவிளம்,கூவிளம்,புளிமா,தேமா
(B) தேமா,புளிமா,கூவிளம்,கருவிளம்
(C) புளிமா,தேமா,கூவிளம்,கருவிளம்
(D) கூவிளம்,கருவிளம்,தேமா,புளிமா



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

நிரல் படுத்துக:

**34.** மும்மலங்கள்:

(A) ஆணவம்,கன்மம்,மாயை

(B) மாயை,ஆணவம்,கன்மம்

(C) கன்மம்,மாயை,ஆணவம்

(D) ஆணவம்,மாயை,கன்மம்

நிரல் படுத்துக:

**35.** முத்தமிழ் வரிசை:

(A) நாடகம்,இசை,இயல்

(B) நாடகம்,இயல்,இசை

(C) இசை,இயல்,நாடகம்

(D) இயல்,இசை,நாடகம்

**36.** பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | சீவக சிந்தாமணி | – | (i) | கிறித்துவ மதம் |
| (b) | மணிமேகலை | – | (ii) | இஸ்லாம் மதம் |
| (c) | இரட்சணிய யாத்ரீகம் | – | (iii) | பௌத்த மதம் |
| (d) | சீறாப்புராணம் | – | (iv) | சமண மதம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | iv | iii | i | ii |
| (B) | ii | iii | iv | i |
| (C) | iv | i | ii | iii |
| (D) | iii | iv | i | ii |

**37.** பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | ஆண்டாள் | – | (i) | நிகண்டு ஆசிரியர் |
| (b) | கருவூரார் | – | (ii) | நாயன்மார் |
| (c) | கண்ணப்பர் | – | (iii) | சித்தர் |
| (d) | ரேவண சித்தர் | – | (iv) | ஆழ்வார் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | iv | i |
| (B) | iii | iv | i | ii |
| (C) | iv | i | ii | iii |
| (D) | iv | iii | ii | i |



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

38. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | சிவகாமி | – | (i) | கல்மரம் |
| (b) | அம்பை | – | (ii) | புத்தம் வீடு |
| (c) | ஹெப்சியா ஜேசுதாசன் | – | (iii) | சிறகுகள் முறியும் |
| (d) | திலகவதி | – | (iv) | ஆனந்தாயி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | ii | iv | i | iii |
| (B) | iii | iv | ii | i |
| (C) | iv | iii | ii | i |
| (D) | iv | i | ii | iii |

39. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | இளம்பூரணர் | – | (i) | யாப்பருங்கலக் காரிகை |
| (b) | பரிமேலழகர் | – | (ii) | தொல்காப்பியம் |
| (c) | குணசாகரர் | – | (iii) | சிலப்பதிகாரம் |
| (d) | அடியார்க்கு நல்லார் | – | (iv) | திருக்குறள் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | iv | i |
| (B) | iv | iii | i | ii |
| (C) | iii | iv | i | ii |
| (D) | ii | iv | i | iii |

40. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | திருவாய் மொழி | – | (i) | குட்டித் தொல்காப்பியம் |
| (b) | திருக்குறள் | – | (ii) | திராவிட வேதம் |
| (c) | திருத்தொண்டர் மாக்கதை | – | (iii) | உலகப் பொது மறை |
| (d) | தொன்னூல் விளக்கம் | – | (iv) | பெரிய புராணம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | iv | i |
| (B) | iv | iii | ii | i |
| (C) | iii | iv | i | ii |
| (D) | ii | iii | i | iv |



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

**41.** பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | அம்மா வந்தாள் | – | (i) | அசோகமித்திரன் |
| (b) | தண்ணீர் | – | (ii) | இராஜம் அய்யர் |
| (c) | கரிப்பு மணிகள் | – | (iii) | தி.ஜானகிராமன் |
| (d) | கமலாம்பாள் சரித்திரம் | – | (iv) | இராஜம் கிருஷ்ணன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | iii | i | iv | ii |
| (B) | iii | iv | ii | i |
| (C) | ii | iv | i | iii |
| (D) | iv | ii | i | iii |

**42.** பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | மலைபடு கடாம் | – | (i) | எட்டுத் தொகை |
| (b) | திருப்பாவை | – | (ii) | பத்துப்பாட்டு |
| (c) | பதிற்றுப்பத்து | – | (iii) | சிற்றிலக்கியம் |
| (d) | திருக்குற்றாலக்குறவஞ்சி | – | (iv) | நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | iv | iii | i | ii |
| (B) | ii | iv | i | iii |
| (C) | iii | i | iv | ii |
| (D) | iv | i | iv | iii |

**43.** பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | புகழேந்திப் புலவர் | – | (i) | நைடதம் |
| (b) | திருவரங்கத்து அமுதனார் | – | (ii) | பெரிய திருமொழி |
| (c) | அதிவீரராம பாண்டியன் | – | (iii) | இராமானுஜ நூற்றந்தாதி |
| (d) | திருமங்கை ஆழ்வார் | – | (iv) | நளவெண்பா |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | ii | iv | i | iii |
| (B) | iii | i | iv | ii |
| (C) | iv | i | ii | iii |
| (D) | iv | iii | i | ii |

**44.** பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | கதரின் வெற்றி | – | (i) | ந.முத்துச்சாமி |
| (b) | பசி | – | (ii) | சோ. இராமசாமி |
| (c) | நாற்காலிக்காரர் | – | (iii) | கிருஷ்ணசாமிப் பாவலர் |
| (d) | யாருக்கும் வெட்கமில்லை | – | (iv) | இந்திரா பார்த்தசாரதி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | ii | iii | iv | i |
| (B) | iii | iv | i | ii |
| (C) | iv | ii | i | iii |
| (D) | ii | i | iv | iii |



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

45. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | ஆதி மந்தி | – | (i) | அதியமான் |
| (b) | கபிலர் | – | (ii) | கோப்பெருஞ் சோழன் |
| (c) | ஔவையார் | – | (iii) | பாரி |
| (d) | பிசிராந்தையார் | – | (iv) | ஆட்டனத்தி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | iii | i | iv | ii |
| (B) | ii | iii | iv | i |
| (C) | iv | iii | i | ii |
| (D) | iii | iv | ii | i |

கீழ் வரும் உரைநடைப் பகுதியைப் படிக்கவும். இதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு உரிய விடை அளிக்கவும்.

இசையையும் கூத்தையும் விளக்கிய நூல்கள் பல வழங்கி வந்தன. வாய்ப்பாட்டுக்குக் குழலும் யாழும் வீணையும் பக்க மேளங்களாக நின்றன. பண் கேட்டலும், நாடகம் பார்த்தலும் மக்களின் பொழுது போக்குகளுள் சிலவாம். இசைக் கச்சேரி இன்ன முறையில் இயற்றப்பட வேண்டும் என்று இலக்கணம் வகுக்கப் பட்டிருந்தது. சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களுள் கூறப்பட்ட யாழ் வகைகளும் பண்வகைகளும் தொடர்ந்து பயிற்சியில் இருந்து வந்தன. இடையர் ஏறு தழுவும் போது ஏறங்கோள் என்ற தனிப்பறை ஒன்று முழங்குவர். வீணையின் உறைக்கு எழினி என்று பெயர். மட்கிய மரம், வாளால் வெட்டுண்ட மரம், இடி விழுந்த மரம் ஆகியவற்றால் வீணைகள் செய்வதில்லை. அவற்றுக்காகக் கூடிய மரத்துக்குத் தனி இலக்கணம் வகுக்கப் பட்டது.

கூத்தாடி முதிர்ந்த பெண்களுக்கும், பின்பாட்டுப் பாடிய பெண்களுக்கும், நாட்டியத்துக்குப் பதம் பாடிய பெண்களுக்கும் தோரிய மடந்தையர் என்று பெயர். இசைப்புலவர்கள் பாடும் போது 'தே தா' என்று ஆளத்தி செய்வார்கள். சில யாழ்களில் நரம்புக்குள் மயிர் பொதியப் பட்டிருக்கும். வீணை வாசிக்கத் தொடங்கும் முன்பு அதற்கு மலர்மாலை சூட்டுவார்கள். முழவுக்கு இருபுறமும் மண் பூசுவார்கள். நாட்டிய அரங்கினில் தாமாகவே திறந்து மூடிக் கொள்ளும் இயந்திர எழினிகள் (திரைகள்) கட்டப் பட்டிருந்தன.

நிரல் படுத்துக :

46. வாய் பாட்டுப் பக்க மேளங்கள்.

(A) குழலும் யாழும் வீணையும

(B) யாழும் வீணையும் குழலும்

(C) வீணையும் யாழும் குழலும்

(D) வீணையும் குழலும் யாழும்



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

47. ஏறு தழுவும் போது ஒலித்த தனிப்பறை

(A) மாறு கோள்

(B) ஏறங்கோள்

(C) வியங்கோள்

(D) பொருள் கோள்

48. உறுதிக்கூற்று: நாட்டியத்திற்குப் பதம் பாடும் பெண்களைப் 'பேரிளம் பெண்கள்' என்பர்.

காரணம்: இசைப் புலவர்கள் பாட இப்பெண்கள் தோய்ந்து நடனம் ஆடுவதால்.

(A) உ.கூ. சரி. + கா. சரியன்று.

(B) உ.கூ. + கா. இரண்டும் சரியல்ல.

(C) உ.கூ. சரியன்று; கா. சரி.

(D) உ.கூ. + கா. இரண்டும் சரி.

49. பொருத்துக:

| | | | | |
|---|---|---|---|---|
| (a) | வீணையின் உறை | – | (i) | இசைப்புலவர்கள் |
| (b) | ஏறு தழுவுவோர் | – | (ii) | தோரிய மடந்தையர் |
| (c) | கூத்தாடிமுதிர்ந்தபெண்கள் | – | (iii) | இடையர் |
| (d) | ஆளத்தி செய்வோர் | – | (iv) | எழினி |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | iv | i | ii | iii |
| (B) | ii | iii | iv | i |
| (C) | iii | i | iv | i |
| (D) | iv | iii | ii | i |

50. தாமாகவே திறந்து மூடிக்கொள்ளும் திரைகளைக் குறிக்கும் பெயர்

(A) இயந்திர எழினி

(B) கரந்துறை எழினி

(C) மறைந்துறை எழினி

(D) சித்திர எழினி



Latest Sarkari Jobs, Govt Exam Results, Vacancies and updates on one click
Know More

prepp

# Latest Sarkari jobs, Govt Exam alerts, Results and Vacancies

- Latest News and Notification
- Exam Paper Analysis
- Topic-wise weightage
- Previous Year Papers with Answer Key
- Preparation Strategy & Subject-wise Books

To know more **Click Here**

www.prepp.in